இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 216 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 03 – திங்கள்கிழமை 17 மார்ச் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 216 : Thiruvalluvar Year - 2056 - Panguni 03 - Monday 17 March 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## நீதிமன்றங்களும் நீதியரசர்களும்

# கூட்டாட்சி தத்துவத்தை காப்பாற்ற முன் வரவேண்டும்!

## சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 17 -**

**சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் கூட்டாட்சி தத்துவத்தை காப்பாற்ற நீதிமன்றங்களும் நீதியரசர்களும் முன் வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.03.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

முதலில் ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். நீதியரசர் சுந்தரேஷ் அவர்கள் இங்கு உரையாற்றிய போது ஒரு இக்கட்டான நிலையில் நின்று கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். ஒரு நீதியரசர் தமிழில் பேசுவார் என்று நினைத்தோம்; ஆங்கிலத்தில் பேசினார். ஒரு நீதியரசர் ஆங்கிலத்தில் பேசுவார் என்று நினைத்தோம்; ஆனால், தமிழில் பேசினார். இதுதான் இரு மொழிக் கொள்கை. இது தமிழ் நாடு. இக்கட்டான நிலை எல்லாம் கிடையாது. நல்ல நிலைதான் இது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.3.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ், நீதியரசர் கே.வி. விஸ்வநாதன், ஆர். மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, பி. வில்சன், ஆர். கிரிராஜன், இந்திய கூடுதல் சொலிசிடர் ஜென்ரல் ஏஆர்எல். சுந்தரேசன், இந்திய முன்னாள் அட்டர்னி ஜென்ரல் கே.பராசரன், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் எம்.பாஸ்கர், செயலாளர் எஸ். திருவேங்கடம், நீதியரசர்கள், மூத்த வழக்கறிஞர் ராஜய்யா உள்ளிட்ட வழக்கறிஞர்கள், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டிலிருந்து சென்று நீதித்துறைக்கு பெருமை சேர்ப்போர்!

நேற்று நிதிநிலை அறிக்கையை நாங்கள் தாக்கல் செய்தோம். நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு, இன்றைக்கு நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ஸ்ரீராம் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அவருடன் நான் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. அதனால், நான் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் இருந்து சென்று இந்திய அளவில் நீதித்துறைக்கு பலவிதங்களில் பெருமை சேர்த்து கொண்டிருக்கக்கூடிய உச்சநீதிமன்ற நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்களுக்கும் - உச்சநீதிமன்ற நீதியரசர் கே.வி.விஸ்வநாதன் அவர்களுக்கும், உச்சநீதிமன்ற நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மெட்ராஸ் பார் அசோசியேஷனின் போற்றத்தக்க 160ஆம் ஆண்டு பயணத்தைக் குறிக்கும் கொண்டாட்டத்தில் உங்களுடன் நானும் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன். வாய்ப்பினை தந்த அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்கிறேன்.

### தலைசிறந்த பாரம்பரியம் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம்!

இந்தியாவிலேயே தலைசிறந்த பாரம்பரியம் கொண்டது நம்முடைய சென்னை உயர்நீதிமன்றம்! நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மூத்த வழக்கறிஞர் அதை விளக்கியிருக்கிறார். எனவே, அதுகுறித்து நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

1862ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தின் பார் அசோசியேஷன், 1865 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அந்த ஆண்டு மார்ச் 14ஆம் நாள் முதல் கூட்டம் நடந்தது. இன்றைக்கு அதனுடைய 160ஆம் ஆண்டை கொண்டாடக்கூடிய வகையில் இதை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதிலும், முற்போக்கான சமூக வளர்ச்சியை நோக்கி நடைபோடுவதிலும் வழக்கறிஞர்களின் பங்கு மிக முக்கியமானதாகும்!

வழக்கறிஞர்கள்தான், சமூகத்தில் நிலவுகின்ற அநீதி என்ற நோயைக் குணப்படுத்துகின்ற மருத்துவர்கள்! அதுமட்டுமல்ல, வழக்கறிஞர்கள் சங்கம் என்பது, சமூகநீதியைக் காப்பதிலேயும், தனிநபர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதிலேயும் முதன்மை அமைப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

### ஜனநாயகத்தை செதுக்குவதில் நீதியரசர்கள் - வழக்கறிஞர்கள் பங்கு!

'சட்டம் ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்.

> **அரசமைப்புச் சட்டத்தின் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் எதிராக உறுதியான தூண்களாக நிற்கும் சுதந்திரமான நீதித்துறை, சிறந்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுடைய பங்களிப்பு ஆகியவை அரசமைப்பின் உயிர்ப்பான நிலைத் தன்மைக்குக் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.**

ஜனநாயகத்தை செதுக்குவதில், வழக்கறிஞர்கள் மற்றும் நீதியரசர்களுடைய பங்களிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் உருவான வழக்கறிஞர்கள், இந்தியாவின் பிற உயர் நீதிமன்றங்களிலும் தங்களுடைய அறிவாற்றலால், வாதத்திறமையால் புகழடைந்திருக்கிறார்கள். அரசமைப்புச் சட்டத்துக்கு மெருகூட்டுகின்ற பல தீர்ப்புகளை, நம்முடைய நீதியரசர்கள் வழங்கியிருக்கார்கள். இன்றைக்கு வரைக்கும், அரசியல் சாசனத்தை பாதுகாப்பதில், நம்முடைய சென்னை உயர்நீதிமன்றமும் மெட்ராஸ் பார் அசோசியேஷனும் மிகச் சிறப்பான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

மெட்ராஸ் பார் அசோசியேசனின் 160 ஆவது ஆண்டு விழாவினை சேர்த்து, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75ஆவது விழாவையும் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்! அதற்காக என்னுடைய வாழ்த்துகள்!

"அரசமைப்பு என்பது, சமூக நீதி மற்றும் சமத்துவத்தை அடைவதற்கான ஒரு கருவி" என்றும், "அரசமைப்பு என்பது சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை வாழ்க்கையின் கொள்கையாக அங்கீகரிக்கும் ஒரு முறை" என்றும் மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்.

அரசமைப்பு ரீதியாக, இந்தியா ஒரு ஜனநாயக சோசலிச மதச்சார்பற்ற இறையாண்மை பொருந்திய குடியரசு!

### உத்தரவாதம் அளிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டம்!

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு இது உத்தரவாதம் அளிக்கிறது.

அரசமைப்புச் சட்டமானது அரசாங்க கட்டமைப்பு, நடைமுறைகள் மற்றும் அதிகாரங்களுக்கான வழிகாட்டுதல்களை நிறுவுவதோடு, அடிப்படை உரிமைகள், மையக் கொள்கைகள் மற்றும் தங்கள் நாட்டிற்கான குடிமக்களின் கடமைகளையும் வரையறுக்கிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணிக்கு

# மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

*சென்னை, மார்ச் 17 -*

*சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணி நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 8 ஆயிரத்து 997 சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களை தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நிரப்ப முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணி நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*பணி நியமனம் செய்யப்படும் சமையல் உதவியாளர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

---

## வாக்காளர் பட்டியல் குளறுபடி:

# ஏப்.30க்குள் ஆலோசனை கூறலாம்!

## தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச் 17 -

வாக்காளர் பிரச்சினை குறித்த ஆலோசனைகளை அரசியல் கட்சிகள் வரும் ஏப்ரல் 30ம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவரின் வாக்காளர் அடையாள அட்டை எண்ணும், உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் வாக்காளர் அடையாள அட்டை எண்ணும் ஒன்றாக இருந்தது தெரியவந்தது.

இதை சுட்டிக்காட்டிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, போலி வாக்காளர்கள் உள்ளதாக குற்றம்சாட்டினார்.

இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், "வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2 பேருக்கு ஒரே எண் கொண்ட வாக்காளர் அடையாள அட்டை இருந்தாலும், அவர்களை போலி வாக்காளர்களாக கருத முடியாது. அவர்களால் 2 இடங்களிலும் வாக்களிக்க முடியாது. தங்களுடைய வாக்குப்பதிவு மையத்தில் மட்டுமே வாக்களிக்க முடியும் எனினும், இதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், வரும் 18ம் தேதி மத்திய உள் துறை செயலாளர், சட்டத் துறை செயலாளர் மற்றும் ஆதார் ஆணைய தலைமைச் செயல் அதிகாரி ஆகியோருடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ஆலோசனை நடத்த உள்ளார். அப்போது, ஒரே எண் 2 வாக்காளர்களுக்கு ஒதுக்கப்படுவதைத் தவிர்க்க, வாக்காளர் அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைப்பதை கட்டாயமாக்குவது குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

இதுதவிர, வாக்காளர் பதிவு அதிகாரிகள் (இஆர்ஓ), மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (டிஇஓ) அல்லது மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் (சிஇஓ) நிலையிலான, தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து, அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் வரும் ஏப்ரல் 30ம் தேதிக்குள் தங்கள் ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.